DEPOSITION OF WITNESS
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KAMUTHI.
Case No.CC 93/2021
Prosecution witness – PW.2

| | | |
|---|---|---|
| Name | :திருமதி.மகாராணி | Caste: |
| Father's Name | : பெரியசாமி | Calling: |
| Village | : | Religion: |
| Taluk | : | Age: |

16.05.2026 – 11.42 AM
எதிரி ஆஜர். எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.
<u>அரசு தரப்பில் முதல் விசாரணை</u>:–

1. நான் கமுதி கோட்டைமேட்டில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது அண்ணன். ஆஜர் எதிரியை எனக்கு தெரியும். அவர் எனது உறவினர் தான். எனக்கும் ஆஜர் எதிரிக்கும் எவ்வித முன்விரோதமும் கிடையாது. சுமார் 5, 6 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் மதியம் 02.00 மணியளவில் நானும், எனது அண்ணன் முருகனும் எங்கள் வீட்டில் இருந்தபோது வீட்டிற்கு வெளியே தெருவில் கூட்டமாக 10க்கும் மேற்பட்ட நபர்கள் கூச்சலிட்டு சண்டையிட்டுக் கொண்டிருந்தார்கள்.

2. நானும், எனது அண்ணனும், எனது மகன் ஜனமுருகனும் கூட்டத்திற்குள் சென்று பார்த்தபோது கூட்டத்தில் இருந்த யாரோ எங்களை கீழே தள்ளிவிட்டார்கள். நாங்கள் கீழே விழுந்ததில் எங்களுக்கு லேசான காயம்பட்டது. எங்களுக்கு ஏற்பட்ட காயம் லேசான காயம் என்பதால் மருத்துவமனை சென்று சிகிச்சை பெறவில்லை. போலீசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பில் மேற்படி சாட்சியை பிறழ் சாட்சியாக பாவித்து குறுக்கு விசாரணை செய்ய அனுமதி கோரியதின் பேரில் அனுமதியளிக்கப்பட்டது)

<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை</u>:–

1. ஆஜர் எதிரியானவர் இடப்பிரச்சனை சம்மந்தமாக என்னிடம் 10 நாட்கள் சண்டையிட்டு வந்தநிலையில் கடந்த 20.09.2020ம் தேதி மதியம் 01.30 மணியளவில் அ.சா.1ம், எனது அண்ணன் சண்முகவேலும், எனது வீட்டிற்கு

வந்து வீட்டின் வெளியே நின்று பேசிக்கொண்டிருந்தபோது ஆஜர் எதிரி அங்கு வந்து ஆபாசமாக பேசி கத்திக்கம்பை எடுத்து அ.சா.1ன் வலது கையின் மேற்பகுதியில் வெட்டி காயம் ஏற்படுத்தியதாகவும், அதை விலக்க வந்த என்னை ஆஜர் எதிரி சேலையை பிடித்து இழுத்து அடித்ததாகவும், எனது மகன் ஜனமுருகனையும் ஆஜர் எதிரியானவர் கீழே கிடந்த கம்பால் அடித்து காயப்படுத்தி பின்னர் கொலை மிரட்டல் விடுத்ததாகவும், பின்பு வீட்டில் இருந்த ரூ.2000/- மதிப்புள்ள பொருட்கள் மற்றும் கண்ணாடி சோக்கேஷை அடித்து சேதப்படுத்தியதாவும், போலீசார் விசாரித்தபோதும் சொல்லிவிட்டு தற்போது எதிரிகள் எனக்கு உறவினர்கள் என்பதால் எதிரிகளுடன் சமாதானம் செய்து கொண்டு வழக்கிலிருந்து எதிரிகளைக் காப்பாற்ற உண்மை சம்பவத்தை மறைத்து பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

THANGA KARTHIKA
Digitally signed by THANGA KARTHIKA
Date: 2026.05.16 16:31:29 +0530